**பாணந்துறை நகர சபை**
**களுத்துறை மாவட்டம்**

------------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்**

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 யூன் 17 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 மார்ச் 21 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 யூன் 22 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

**1.2 அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தைத் தவிர, கணக்காய்வுக்காக 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பாணந்துறை நகர சபையின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சல் கூற்றையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையானதும் நியாயமானதுமான நிலையை வெளிப்படுத்துகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் செலுத்த வேண்டிய செலவினமாக செலவினத் தலைப்பிற்காக ரூபா 29,236,676 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் இதற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த பட்டோலையின் படி செலுத்தப்பட வேண்டிய செலவினங்களின் கூட்டுத்தொகை ரூபா 29,394,001 ஆகக் காணப்பட்டது.

(ஆ) ஆயுர் வேத களஞ்சியப் பதிவேட்டின் படி, 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆயுர் வேத களஞ்சிய இருப்பு ரூபா 199,931 தொகையான போதிலும், நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுகையில் அப் பெறுமதி ரூபா 76,569 ஆகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 48,363,261 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 49,804,754 ஆக இருந்தது.

## 2.2 நிதிக் கட்டுப்பாடு

(அ) 1990 ஆம் ஆண்டு முதல் 2014 திசெம்பர் 31 வரை செலுத்தப்பட்டிருந்த ரூபா 1,110,074 தொகையான முற்பணம் 2015 ஏப்ரல் 06 ஆம் திகதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியில் 2 ஆண்டுகள் கடந்திருந்த ரூபா 3,248,956 தொகையான வைப்பு வருமானத்திற்குக் கொண்டுவரப்படுவதற்கோ அல்லது தீர்க்கப்படுவதற்கோ 2015 மார்ச் 13 ஆம் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) ஓய்வு பெற்ற, சேவையை விட்டு விலகிச் சென்ற மற்றும் இடமாற்றம் பெற்றுச் சென்று எனினும் கணக்காய்வுத் தினமாகிய 2015 யூன் வரையிலும் அறவீடுகள் மேற்கொள்ளப்பட்டிராத 21 ஊழியர்களால் பெறப்பட்டிருந்த கடன் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 169,552 தொகையானதுடன் நீண்டகாலமாக நிலவிவரும் ரூபா 533,879 தொகையான இனங்காணப்படாத ஊழியர்களின் கடன் மீதியும் காணப்பட்டது.

(ஈ) 2014 சனவரி மாதம் பணம் வங்கியில் இடப்படுகையில் 06 சந்தர்ப்பங்களின் போது காசாளருக்குக் கிடைக்கப்பெற்ற பணத்தொகையைப் பார்க்கிலும் ரூபா 15,141 தொகை குறைவாகவும் ரூபா 9,812 தொகை கூடுதலாகவும் வங்கியில் இடப்பட்டிருந்தது.

(உ) சபைத் தலைவரின் அறிவித்தலின் படி, 2015 சனவரி 07 ஆம் திகதி காசாளரின் பெறுவனவுகளில் ரூபா 180,632 தொகை அன்றைய நாள் காசாளர் கடமைகளில் பதில் கடமையாற்றிய கணக்குப் பிரிவில் கடமையாற்றிய காரியாலய ஊழியர் பதவி வகிக்கும் இரு ஊழியர்களால் சபை ஊழியர்களுக்கு மேலதிக நேரக் கடமைப் படிப்பணமாகச் செலுத்தப்பட்டிருந்ததுடன் இம் மேலதிகப் பணக் கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களுக்காக கணக்காளரின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

## 2.3 வருமான நிருவாகம்

### 2.3.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரால் மீளாய்வாண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா ‘000 | ரூபா ‘000 | ரூபா ‘000 |
| (i) | வீதவரியும் வரியும் | 42,830 | 28,257 | 28,095 |
| (ii) | வாடகை | 3,309 | 2,750 | 959 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 220 | 218 | 2 |

**2.3.2 வீதவரி**

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையாகக் காணப்பட்ட வீதவரி மீதி ரூபா 27,948,654 ஆகக் காணப்பட்டது. இதில் 3 ஆண்டு காலம் முதல் நிலுவையாகக் காணப்பட்ட மீதி ரூபா 4,500,424 ஆனதுடன் இதில் ரூபா 50,000 தொகைக்கு மேற்பட்ட நிலுவை மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,203,831 ஆகக் காணப்பட்டது.

**2.3.3 வேலை மற்றும் வியாபார வரி**

2010 ஆம் ஆண்டில் நிலுவையான வியாபார வரியை அறவிட்டுக் கொள்வதற்காக சபையால் வழக்கு தொடரப்பட்டதை அடுத்து வரி செலுத்துனர்களால் நீதிமன்றத்திற்குச் செலுத்தப்பட்டிருந்த ரூபா 25,900 தொகையான வரித் தொகை சபைக்குத் தருவித்துக்கொள்வதற்கு கணக்காய்வுத் தினமாகிய 2015 மார்ச் 11 ஆம் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3.4 கடை வாடகை**

(அ) 2014 ஆம் ஆண்டின் முன்னைய ஆண்டுகளுக்கு உரித்தான ரூபா 311,660 தொகையும், 2014 ஆம் ஆண்டிற்கு உரித்தான ரூபா 179,350 தொகையுமான நிலுவைக் கடை வாடகை 2015 ஏப்ரல் 30 ஆம் திகதி வரையிலும் அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சந்தை வீதியின் எல் 2 ஆம் இலக்க மீன் வியாபார நிலையத்தில் இருந்து 2013 திசெம்பர் மாதம் முதல் 2014 செப்தெம்பர் மாதம் வரை ரூபா 55,500 தொகையான நிலுவைக் கடை வாடகை மீதி ஒன்று காணப்பட்டது. இதற்கான குத்தகை வாடகை உடன்படிக்கையும் இருக்கவில்லை.

(இ) 8 ஆம் இலக்க மீன் வியாபார நிலையம் 2009 ஆம் ஆண்டில் தலைவரின் குறிப்பின் மூலம் உடன்படிக்கை இன்றி 03 மாத காலத்திற்காக குத்தகைக் கிடப்பட்டிருந்ததுடன் அந் நபர் 03 மாத காலம் கடந்ததன் பின்னரும் வியாபார நிலையத்தை சபைக்கு ஒப்படைத்திராமையால் சபையால் வழக்குத் தொடரப்பட்டிருந்தது. 2013 செப்தெம்பர் மாதம் வரை சபையால் இவ் வியாபார நிலையத்திற்காக பட்டியலிடப்பட்டிருந்த வாடகை ரூபா 77,000 தொகையாகக் காணப்பட்டது. 2014 திசெம்பர் 19 ஆம் திகதி கிடைக்கப்பெற்றிருந்த வழக்குத் தீர்ப்பின் படி, வியாபார நிலையத்தை சபைக்கு மீளப் பெற்றுக்கொள்வதற்கும் வாடகைத் தொகையைப் பதிவழித்துக்கொள்வதற்கும் தீர்மானிக்கப்பட்டிருந்தது. இவ் வழக்கிற்காக 2014 ஆம் ஆண்டின் போது மாத்திரம் வழக்குக் கட்டணமாக சபையினால் ரூபா 62,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) ரூபா 283,160 கூட்டுத்தொகையான நிலுவைக் கடை வாடகை மீதி நிலவிய 32 வியாபார நிலையங்களின் கோவைகள், வழக்குத் தொடர்வதற்காக 2013 ஆம் ஆண்டின் போது சட்டத்தரணி ஒருவருக்கு ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும், அவ் உடன்படிக்கைகளில் குறைபாடுகள் உள்ளதாகக் குறிப்பிடப்பட்டிருந்ததன் காரணமாக கணக்காய்வுத் தினமாகிய 2015 மார்ச் 13 ஆம் திகதி வரையிலும் வழக்குத் தொடரப்பட்டிருக்கவில்லை.

### 2.3.5 காணி விற்பனையின் மூலம் அறவிடப்படும் 1 சதவீத வரி

நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் (225 அதிகாரம்) 165 (ஈ) (1) ஆம் பிரிவின் பிரகாரம் கூறாக்கப்பட்டு காணி விற்பனை செய்யப்படுகையில் விற்பனை விலையில் 1 சதவீதத்திற்குச் சமனான தொகை வரியாக அறவிடப்பட வேண்டிய போதிலும் 2014 ஆம் ஆண்டில் 4 காணி விற்பனைகளில் இருந்து அறவிடப்பட்டிருந்த 1 சதவீத வரித் தொகை ரூபா 1,686,650 தொகையான போதிலும் இது உண்மையான விற்பனை விலையில் 1 சதவீதமாக அல்லாதிருந்ததுடன் வருமான நிர்வாகத்தால் விற்பனை விலையாக மதிப்பிடப்பட்டிருந்த தொகையில் 1 சதவீதமாக மாத்திரம் காணப்பட்டது.

(ஆ) இவ்வாறே, ஒரு அளவீட்டுத் திட்டத்திற்கு உரித்தான 4 காணித் துண்டுகளுக்கான விற்பனை விலையாக வருமான நிர்வாகியால் இரு சந்தர்ப்பங்களின் போது ஒன்றுக்கொன்று வேறுபட்ட விலைகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் இதன் படி காணிகளின் விற்பனை விலை மதிப்பிடப்படுகையில் குறித்த அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்ட கொள்கை ஒன்று அல்லது முறை ஒன்று பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 போதிய அதிகாரப் பொறுப்பால் உறுதிப்படுத்தப்பட்டிராத கொடுக்கல்வாங்கல்கள்

வெசாக் சமாதி வலயத்தில் நடாத்தப்பட்டிருந்த அலங்கார விளக்குப் போட்டிக்காக பரிசில்கள் வழங்கப்படுவதற்காக சபையால் ரூபா 31,500 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் இதற்காக நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் (255) ஆம் அதிகாரத்தின் 159(ஊ) பிரிவின் படி, அமைச்சரின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

### 3.2 முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்

2014 ஆம் ஆண்டின் கலாச்சார விழாவிற்காக மக்களின் உதவி அனுசரணைப் பங்களிப்பாக ரூபா 37,000 தொகை காசாகப் பெறப்பட்டு செலவிடப்பட்டிருந்ததுடன் இதற்காக பற்றுச்சீட்டுக்கள் வழங்கப்பட்டிராததுடன் அக் கொடுப்பனவுகளுக்காக உறுதிச்சீட்டுக்கள் தயாரிக்கப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 3.3 ஒப்பந்த நிர்வாகம்

(அ) ஒரே காலப்பகுதியில் பல ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்த சங்கங்கள்

2011 செப்தெம்பர் 27 ஆம் திகதிய அரச நிதிச் சுற்றறிக்கையின் 452 ஆம் இலக்கத்தின் படி, சமூக சார்பான அமைப்புகளுக்காக நேரடியான ஒப்பந்தங்கள் ஒப்படைக்கப்படுகையில், ஒப்பந்தத்தை வழங்கும் சந்தர்ப்பத்தின் போது உரிய சமூக சார் அமைப்புகள் 3 ஒப்பந்தங்களைப் பார்க்கிலும் அதிகமான அளவில் ஈடுபடலாகாத போதிலும் இதற்கு முரணாக ஒரே காலப்பகுதியின் போது ஒரே சங்கத்தால் 06 ஒப்பந்தங்களுக்கும் மேலும் ஓர் சங்கம் 08 ஒப்பந்தங்களையும் மேற்கொண்டிருந்தமை 2014 ஒக்டோபர் மாதம் மேற்கொள்ளப்பட்டிருந்த தெரிவுக் கணக்காய்வின் போது கண்டறியப்பட்டது.

(ஆ) நிர்மாணிப்புகள் தொடர்பான பௌதீக மெய்மையாய்வின் போது அவதானிக்கப்பட்ட விடயங்கள்

---

2015 மார்ச் 18 ஆம் திகதி சபையின் வீதி மற்றும் நிர்மாணிப்புகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட களப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) நகர சபை விளையாட்டு அரங்கு திருத்தவேலைகள்

---

(அ) நகர சபை விளையாட்டு அரங்கு நிர்மாணிப்புகள், 3 கட்டங்களின் கீழ் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அச் சகல நிர்மாணிப்புகளும் 2014 செப்தெம்பர் 11 ஆம் திகதி பூர்த்திசெய்யப்பட்டிருந்தன. குணக்காய்வுத் தினமாகிய 2015 மார்ச் 18 ஆம் திகதி வேலை பூர்த்திசெய்யப்பட்டு 06 மாதங்களான மிகக் குறுகிய காலம் கடந்திருந்த போதிலும் விளையாட்டுத் திடலின்_விளையாட்டு அரங்கு நிலத்தில் கொங்கிரீட்டில் புதிதாக இடப்பட்ட சீமேந்து ஆங்காங்கே வெடிப்புற்றிருந்ததுடன் சில பகுதிகளில் உடைந்திருந்தமையால் மீள நிரப்பப்பட்டிருந்தது.

(ஆ) விளையாட்டரங்கின் நுழைவாயிலில் சுவர் மேற்பரப்பின் செப்பனிடல் 3 மீட்டர்கள் வரை நீளமாக வெடிப்புற்று கொங்கிரீட் பகுதி கழரும் நிலையில் காணப்பட்டது.

(ii) சிங்செப மாவத்தைக்கு முன்பாக காமினி கொஸ்தா மாவத்தைக்கு முன்பாக எஞ்சிய பகுதி கொங்கிரீட் இடப்பட்டிருந்தமை

---

மேற்குறித்த வீதி சபை நிதியத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டிருந்த 2014 ஒக்டோபர் 10 ஆம் திகதிக்கு வேலை நிறைவேற்றப்பட்டிருந்ததுடன் வீதியின் சரி நடுவில் (சரிவு ஆரம்பிக்கப்படும் பகுதியில்) வீதியினூடாக நீளமாக வெடித்திருந்தமை அவதானிக்கப்பட்டது.

iii. திப்பெத்த வீதி (காட் தோட்ட வீதி) துணை வீதியின் ஓர் பகுதி கொங்கிரீட் இடல்

---

இவ் வீதியின் ஆரம்பப் பகுதி கொங்கிரீட் தட்டு உடைந்து பாரியளவில் சேதமுற்றிருந்ததுடன் நீர் வழிந்தோடுவதற்காக கால்வாய் முறைமை இருக்கவில்லை. இவ்வாறு இருக்கையில் அவ் வீதிக்கு அருகாமையில் உள்ள 02 வீடுகளிற்கு முன்னால் 37.5 சதுர அடி அளவு சுற்றளவில் மாத்திரம் ரூபா 129,741 செலவில் 2014 ஆம் ஆண்டின் போது புதிதாக கொங்கிரீட் இடப்பட்டிருந்தது.

(இ) மகநெகும வீதி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் -------

---

மகநெகும வீதி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வேலை பூர்த்திசெய்யப்பட்டு நிர்மாணிப்பிற்காக துறைமுகங்கள் மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சால் நிதி பெறப்பட்டிராத போது 2013 ஆம் 2014 ஆம் ஆண்டுகளின் போது 47 செயற்திட்டங்களிற்காக முறையே ரூபா 5,040,575 தொகையும் ரூபா 5,166,022 தொகையும் சபை நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது. கணக்காய்வுத் தினமாகிய 2015 மார்ச் 18 ஆம்

திகதி வரையிலும் இதற்கான பணம் சபைக்கு மீளளிக்கப்பட்டிருக்கவில்லை. அச் செயற்திட்டத்திற்கான 10 சதவீதமான பிடித்து வைத்தல்களும் உள்ளடங்கலாக பெறவேண்டிய தொகையான ரூபா 7,522,141 தொகையும் ரூபா 9,495,476 தொகையும் காணப்பட்டது.

**3.4 செயற்பாட்டு/ முகாமைத்துவ திறமையீனங்கள்**

---

**(அ) ஊழியர் பிணை**

---

உள்ளூராட்சி ஆணையாளர் (மே.மா) இன் 2004 யூலை 9 ஆம் திகதிய LG/05/2004 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தி மற்றும் 1992 சனவரி 29 ஆம் திகதிய 3/4/1 ஆம் இலக்க மேல்மாகாண பிரதம செயலாளரின் கடிதத்தின் படி, பிணை வைக்க வேண்டிய 46 ஊழியர்கள் பிணை வைத்திருக்கவில்லை. சபையில் இருந்து இடமாற்றம் பெற்றுச்சென்ற 08 ஊழியர்களிடம் இருந்து அறவிடப்பட்டிருந்த ரூபா 17,969 தொகையான பிணைப் பணம் அவ் ஊழியர்களுக்கு 2015 மார்ச் 13 ஆம் திகதி வரையிலும் விடுவிக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) திட்டக் குழுப் படிப்பணக் கொடுப்பனவு**

---

2004 திசெம்பர் 15 ஆம் திகதிய உள்ளூராட்சி ஆணையாளர் நாயகத்தின் LG/07/2004 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 15 ஆம் பந்தியின் படி, திட்டக் குழுவால் பரீட்சிப்பிற்கு உட்படுதப்படும் விண்ணப்பங்களின் எண்ணிக்கை ஆகக் குறைந்தது 10 இற்கு மேற்படின் அல்லது 2 மணித்தியாலங்களிற்கு மேலான காலம் குழு நடாத்தப்பட்டிருப்பின் கடமை நேரத்திற்கு மேலாக திட்டக் குழு நடாத்தப்பட வேண்டும். எனினும், 2014 ஆம் ஆண்டின் போது 3 மாதங்களில் கடமை நேரத்தின் பின்னர் 2 மணித்தியாலங்களிலும் குறைவாக குழு நடாத்தப்பட்டிருந்த 4 நாட்களிற்காக ரூபா 24,300 தொகை படிப்பணமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

**(இ) திட்ட அங்கீகாரம்**

---

BP/176/2013 ஆம் இலக்க கேவை இலக்கத்தின் கீழ் சமர்ப்பிக்கப்பட்டிருந்த முதலாவது காணித் திட்டத்தில் காண்பிக்கப்பட்டிருந்த நுழைவு வீதி போதாதிருந்தமையால் அபிவிருத்தியாளரால் காணிக்குள் நுழைவதற்காக உள்ள நகர சபை வீதிகள் இரண்டையும் இணைத்து மீள வரைபடம் தயாரித்து சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் இது நகர அபிவிருத்தி அதிகாரசபையால் தமது பிரமாணங்களின் படி போதியதாகக் காண்பிக்கப்பட்டிருந்தன. இதன் படி, 2014 ஒக்டோபர் 16 ஆம் திகதி சபையில் நடாத்தப்பட்ட திட்டக் குழுவின் மூலம் துணைப் பகிர்விற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. இக் காணிப் பிரிவுடன் தொடர்புபட்ட வீதி தொடர்பாக 2015 மார்ச் 18 ஆம் திகதி சபையின வேலை அதிகாரியுடன் மேற்கொள்ளப்பட்ட பௌதீக மெய்மையாய்வின் போது காணிக்குள் நுழைவதற்கு தொடர்புபடுத்தப்பட்டுள்ள மாற்று வழிப் பாதை நகர சபை நுழைவு வீதிக்கு எவ்வகையிலும் தொடர்புபடவில்லை எனவும் அப் பகுதி மழை நீர் வழிந்தோடுவதற்காக தனியார் காணியில் இருந்து பெறப்பட்ட கால்வாய் எனவும் கண்டறியப்பட்டது.

**(ஈ) உணவு மாதிரி பரீட்சிக்கப்படுவது மற்றும் வழக்கு தொடரப்படுவது**

(i) பொது மக்கள் சுகாதார பரீட்சகர் தமது வலயத்தில் இருந்து ஒரு மாதத்திற்கு ஆகக் குறைந்தது 2 உணவு மாதிரிகளேனும் பரீட்சிக்க வேண்டிய போதிலும் 2014 ஆம் ஆண்டின் போது நகர சபை அதிகார எல்லையின் 3 வலயங்களில் இருந்தும் 07 நிறுவகங்களிடம் இருந்து மாத்திரமே உணவு மாதிரி பெறப்பட்டிருந்ததுடன் 02 நாட்களில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளில் இருந்து 05 வழக்குகள் மாத்திரம் தொடரப்பட்டிருந்தது.

(ii) 2008 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரையான கால எல்லைக்குள் உணவு மாதிரிகள் தொடர்பாகத் தொடரப்பட்டிருந்த வழக்குகளுக்கான தண்டப்பணமாக நீதி மன்றத்தால் அறவிடப்பட்டிருந்த ரூபா 50,000 தொகையில் சபைக்குக் கிடைக்கப்பெற வேண்டியிருந்த 75 சதவீதமான ரூபா 37,500 தொகை 2015 யூன் 15 ஆம் திகதி வரையிலும் தருவிக்கப்பட்டிருக்கவில்லை.

**(உ) மனித வள முகாமைத்துவம்**

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 252 ஆனதுடன் 13 பல்வேறு பதவிகளில் 18 உத்தியோகத்தர்கள் அன்றைய நாள் வெற்றிட நிலையில் இருந்த போதிலும் அப் பதவிகளுக்காக ஆட்சேர்க்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படாது அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்கு மாறாக நிலையான 42 பதவிகளுக்காகவும், 17 அமைய பதவிகளுக்காகவும், வேறு 07 பதவிகளுக்காகவும் ஆட்சேர்ப்பு நடைபெற்றிருந்தது. இதற்கு மேலதிகமாக 02 பதில் கடமைக்கான பதவிகளும் 2013 ஒக்டோபர் 24 ஆம் 2015 பெப்ரவரி 24 ஆம் திகதி முதல் அமுற்படுத்தப்பட்டிருந்தன.

## 3.5 திண்மக் கழிவு முகாமைத்துவம்

2010 ஆம் ஆண்டின் போது திண்மக் கழிவு முகாமைத்துவ அதிகாரசபை மற்றும் சபை நிதியத்தின் மூவலம் ரூபா 774,593 கூட்டுத்தொகை செலவில் நிர்மாணிக்கப்பட்டிருந்த உயிர் வாயுப் பிரிவைச் செயற்படுத்தாதும் கழிவு முகாமைத்துவ அதிகாரசபையின் நிதிப் பங்களிப்பின் மூலம் 2014 ஆம் ஆண்டின் போது பூர்த்திசெய்யப்படுவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த கழிவுப் பொருள் பரிமாற்று நிலைய நிர்மாணிப்புகள் தொடர்ந்தும் தாமதமாகிக் காணப்பட்டமையால் சபை அதிகாரப் பிரதேசத்தில் சேகரிக்கப்படும் கழிவுப் பொருட்களை அகற்றுவதற்காக 2014 ஆம் ஆண்டின் போது மொறட்டுவை மாநகரசபைக்கும் தனியார் நிறுவகங்களுக்கும் ரூபா 4,878,465 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

## 4. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான நிர்வாகம்
(இ) செலவின நிர்வாகம்
(ஈ) இருப்புக் கட்டுப்பாடு
(உ) மனித வள முகாமைத்துவம்
(ஊ) செயற்திட்ட நிர்வாகம்